# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண்.342/பேரூ/2023
நாள். 11.12.2023

திருமதி S. சித்ரா,
ஆனைமலை,
கோயம்புத்தூர் மாவட்டம். ... மனுதாரர்

செயல் அலுவலர்,
ஆனைமலை பேரூராட்சி
கோயம்புத்தூர் மாவட்டம். .... எதிர்மனுதாரர்

கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை வார்டு எண். 3, 42, பாதுஷா நாயகம் நகர் என்ற முகவரியைச் சேர்ந்த திருமதி S. சித்ரா என்பவரது 30.10.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 31.10.2023 அன்று பெறப்பட்டு, 342/பேரூ/2023 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை பேரூராட்சி, வார்டு எண். 3, 42, பாதுஷா நாயகம் நகர், எண் 18, என்ற முகவரியைச் சேர்ந்த திருமதி S. சித்ரா என்பவர் தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

"கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், ஆனைமலை பேரூராட்சி வார்டு எண்WD-01 பாதுஷாநாயகம் நகர், சர்வே எண். 925/2A, 926/2 A, 929/5 ஆகிய பூமிகளில் அமைந்துள்ள மனைப்பிரிவில் மனை எண். 40–ஐ நான் கிரயம் பெற்று ஆனைமலை பேரூராட்சியில் ந.க.எண். 153/2020 நாள் 22.05.2020 கட்டிடம் கட்ட அனுமதி பெற்று வீடு கட்டி குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். மேற்படி மனையிடத்தில் கட்டிட அனுமதி வழங்கும்போது பேரூராட்சி அலுவலர்கள் உரிய வடிகால் வசதி மற்றும் சாலை வசதி அமைத்து தரப்படும் என உறுதி கூறியிருந்தார்கள். அவ்வாறு கழிவுநீர் வடிகால் வசதி அமைத்து தரும் வரையில் கட்டிடத்திலிருந்து வெளியேறும் கழிவு நீரை பொதுசாலையில் விடாமல் உரிமையாளர் காம்பவுண்டுக்குள் செஸ்பூல் கட்டி அப்போதைக்கு அப்போது சுகாதார முறைப்படி சுத்தம் செய்து கொள்ள வேண்டும் என்ற நிபந்தனை பேரில் கட்டிட உரிமம் வழங்கினார்கள். அதன்படியே நானும் எனது வீட்டின் கழிவு நீர் பொது பாதைக்கு செல்லாத வண்ணம் முறையாக செஸ்பூல் கட்டி சுகாதாரத்தை பாதுகாத்து வருகிறேன்.

மேற்படி மனைப்பிரிவில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் கட்டிட உரிமம் வழங்கும்போது மேற்படி நிபந்தனைகளின் பேரில்தான் உரிமம் வழங்கியுள்ளார்கள். மேற்படி மனைப்பிரிவில் வீடுகட்டி வசித்துவரும் ஒவ்வொரு கட்டிட உரிமையாளர்களும் அவரவர் வீட்டிலிருந்து வெளியேறும் கழிவு நீரை பொது பாதையில் விடாமல் அவரவர் காம்பவுண்டுக்குள் செஸ்பூல் கட்டி பராமரித்து கொள்ள வேண்டும்.

ஆனால் மேற்படி மனைப்பிரிவில் உள்ள எனது வீட்டிற்கு எதிர்புறம் மனையிட எண். 26 மற்றும் 35 ஆகியவற்றில் வீடுகட்டி குடியிருந்து வரும் வெள்ளியங்கிரி மற்றும் சுஜாதா மீனாகுமாரி ஆகியோர் மேற்படி கட்டிட உரிமம் வழங்கும்போது விதிக்கப்பட்ட விதிமுறைகளை மீறி அவர்களது வீட்டின் கழிவுநீரை பொது நடைபாதையில் கழித்து வருகிறார்கள். இதனால் அவரது வீட்டிலிருந்து வெளியேறும் கழிவு நீர் நடைபாதையை ஆக்கிரமித்து மேற்படி சாலையை யாரும் உபயோகிக்க முடியாத வண்ணம் இடையூறு ஏற்பட்டுள்ளது. மேலும் மேற்படி கழிவு நீரால் துர்நாற்றம் ஏற்பட்டு அருகில் உள்ள வீடுகளில் நிம்மதியாக குடியிருக்க முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. மேலும் மேற்படி கழிவுநீரால் கொசு உற்பத்தியாகி அந்த பகுதியில் வசிக்கும் மக்களுக்கு டெங்கு மற்றும் மலேரியா பரவி வருகிறது.

இது குறித்து ஆனைமலை பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களுக்கு பலமுறை நேரில் தகவல் கூறியும், எழுத்து மூலமாக புகார் அளித்தும் எந்த பயனும் இல்லை. ஆனைமலை பேரூராட்சி அலுவலக அதிகாரிகளுக்கு மேற்படி பகுதியில் வசித்து வரும் மக்களின் ஆரோக்கியத்தை பற்றிய அக்கறையோ, சுகாதார சீர்கேட்டை சரிசெய்ய வேண்டும் என்ற முனைப்போ இல்லை. மேற்படி பேரூராட்சி அலுவலர்களோ, துப்புரவு ஆய்வாளர்களோ, சுகாதார ஆய்வாளர்களோ, பேரூராட்சி மன்ற உறுப்பினர்களோ மேற்படி பகுதியை பார்வையிட்டு சுகாதார சீர்கேட்டை சரி செய்யவோ எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மேற்படி அதிகாரிகளின் அலட்சிய போக்கால் பொதுமக்களாகிய நாங்கள் கடும் பாதிப்புக்குள்ளாகி உள்ளோம். மேற்படி மனையிட எண். 26 மற்றும் 35 உரிமையாளர்கள் தொடர்ந்து கழிவு நீரை பொது பாதையில் விட்டு, கடும் சுகாதார சீர்கேட்டை ஏற்படுத்திவிட்டு வருகிறார்கள்.

எனவே, மதிப்புக்குரிய அய்யா அவர்கள் இந்த மனுவை பரிசீலனை செய்து மேற்படி அவர்கள் செய்து வரும் சுகாதாரா சீர்கேட்டை தடுத்தும், மேற்படி கழிவுநீர் மீண்டும் பொதுப்பாதையில் வந்து பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தாத வண்ணம் உரிய நடவடிக்கைகளை எடுக்க பேரூராட்சி அலுவலர்களுக்கும், சுகாதார துறை அலுவலர்களுக்கும், உரிய உத்தரவு பிறப்பிக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையினை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 14.11.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் ஆனைமலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3) ஆனைமலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 24.11.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-

06.11.2023 அன்று நேரில் சென்று மனுதாரரால் புகார் தெரிவிக்கப்பட்டுள்ள திரு.வெள்ளிங்கிரி மற்றும் திருமதி சுஜாதா மீனாக்குமாரி அவர்களுக்கு உடனடியாக கழிவுநீரை சாலையில் செல்லாவண்ணம் உறிஞ்சு குழி அமைத்து (Soak pit) கழிவு நீரை பூமிக்குள் செலுத்த வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. அப்பணியினை வீட்டு உரிமையாளர்கள் உடனடியாக செய்து முடிக்காமல் இருந்ததால் மீண்டும் 10.11.23 அன்று வரிவசூலர் மூலம் நேரில் சென்று மூன்று

தினங்களுக்குள் இப்பணியினை முடிக்க அறிவுறுத்தி கடிதம் மூலம் அறிவிப்பு வழங்கப்பட்டதை தொடர்ந்து திரு. வெள்ளிங்கிரி என்பவர் 13.11.23 அன்று பணி யினை முடித்து விட்டார். திருமதி சுஜாதா மீனாக்குமாரி என்பவர் உறிஞ்சு குழி அமைக்க குழி மட்டும் தோண்டிய நிலையில் இருந்தது.

இந்நிலையில் 15.11.2023 மின்னஞ்சல் வாயிலாக தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் மூலமாக இதே புகார் வரப்பெற்றதால் 16.11.2023 அன்று மீண்டும் நேரில் சென்று பார்வையிட்டபொழுது பணி முடிவுறாமல் இருந்ததால் சம்மந்தப்பட்ட வீட்டு உரிமையாளருக்கு 24 மணி நேரத்திற்குள் உறிஞ்சு குழி அமைத்து (Soak pit) கழிவு நீரை பூமிக்குள் செலுத்த வேண்டும் என்று மீண்டும் இறுதி அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து அவ்வீட்டு உரிமையாளர் மறுநாளே உறிஞ்சு குழி (Soak pit) அமைக்கும் பணியினை தீவிரப்படுத்தி முடித்து விட்டார். தற்போது அந்த பகுதியில் எவ்வித சுகாதார சீர்கேடும் இல்லை.

(4) மனுதாரர் மற்றும் பேரூராட்சி செயல் அலுவலரும் 27.11.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 14.11.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) 27.11.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் மனுதாரர் ஆஜராகவில்லை.

6) ஆனைமலை பேரூராட்சியின் செயல் அலுவலர் 27.11.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தமது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:-

"மனுதாரரின் எதிர் வீட்டில் வசிக்கும் வெள்ளியங்கிரி மற்றும் சுஜாதா மீனாகுமாரி ஆகியோர் தங்களது வீட்டில் சேரும் கழிவு நீரை நடைபாதையில் வெளியேற்றுவது குறித்த புகார் மனு பெறப்பட்டதையொட்டி சம்பந்தப்பட்ட வீட்டு உரிமையாளருக்கு அவர்களது வீட்டில் உறிஞ்சு குழி (Soak pit) அமைத்து கழிவு நீரை பூமிக்குள் செல்வதற்கு வழிவகை செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டதைத் தொடர்ந்து அவ்வீட்டின் உரிமையாளர் மேற்கண்ட உறிஞ்சு குழி அமைத்து விட்டதால், தற்போது மேற்கண்ட வீட்டின் கழிவு நீர் நடைபாதையில் செல்லாமல் பூமிக்கு செல்கிறது என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்து, அதன் புகைப்பட நகல்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

7) மனுதாரரின் புகார் மனு மற்றும் ஆனைமலை பேரூராட்சி செயல்அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

மனுதாரர் தனது மனுவில் கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், ஆனைமலை என்கிற இடத்தைச் சார்ந்த திருமதி S. சித்ரா, என்பவர், ஆனைமலை பேரூராட்சிக்குட்பட்ட மனைப்பிரிவில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் கட்டிட உரிமம் வழங்கும்போது கழிவுநீர் வடிகால் வசதி அமைத்து தரும் வரையில் கட்டிடத்திலிருந்து வெளியேறும் கழிவு நீரை பொதுசாலையில் விடாமல் உரிமையாளர் காம்பவுண்டுக்குள் உறிஞ்சு குழி (Soak pit)கட்டி அப்போதைக்கு அப்போது சுகாதார முறைப்படி சுத்தம் செய்து கொள்ள வேண்டும் என்ற நிபந்தனை பேரில் கட்டிட உரிமம் வழங்கினார்கள் என்றும் ஆனால் மனுதாரர் வசிக்கும் வீட்டின் எதிர்புறம் மனை எண்.26 மற்றும் 35ல் வீடுகட்டி குடியிருந்து வரும் வெள்ளியங்கிரி மற்றும் சுஜாதா மீனாகுமாரி ஆகியோர் கழிவுநீரை நடை பாதையில் விட்டு சாலையை யாரும் உபயோகிக்க முடியாத வண்ணம் இருப்பதாய் புகார்அளித்திருந்தார்.

பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் சம்பந்தப்பட்ட வீட்டு உரிமையாளர்களுக்கு அவர்களது வீட்டில் உறிஞ்சு குழி (Soak pit) அமைத்து கழிவு நீரை பூமிக்குள் செல்வதற்கு வழிவகை செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டதைத் தொடர்ந்து அவ்வீட்டின் உரிமையாளர்கள் பேரூராட்சியால் மேற்கண்ட உறிஞ்சு குழி அமைத்து விட்டதால், தற்போது மேற்கண்ட கழிவு நீர் நடைபாதையில் செல்லாமல் பூமிக்கு செல்கிறது எனதெரிவித்துள்ளார்.

இந்நிலையில் கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், பாதுஷா நாயகம் நகரில் வசிக்கும் திருமதி S. சித்ரா என்பவர் தனது வீட்டிற்கு எதிர்புறம் வசிக்கும் மனுதாரர்கள் கட்டிட உரிமம் வழங்கும் போது விதிக்கப்பட்ட விதிமுறைகளை மீறி கழிவுநீரை பொது நடைபாதையில் வெளியேற்றுவதால் ஏற்படும் சுகாதார சீர்கேட்டை சரிசெய்ய இம்முறைமன்றத்திற்கு மனு அளிக்கும் முன்னரே சரி செய்திருக்க வேண்டும். இந்த அலட்சியப் போக்கினை இம்முறைமன்றம் வன்மையாக கண்டிக்கிறது. இனி வரும்காலங்களில் இதுபோன்று புகாருக்கு இடமளிக்காமல் கண்காணிக்க வேண்டும் என ஆனைமலை பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தி இம்முறை மன்றம் ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு டிசம்பர் 11 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திருமதி S. சித்ரா,
எண் 18, பாதுஷா நாயகம் நகர்,
ஆனைமலை,கோயம்புதூர் மாவட்டம்.

2) செயல் அலுவலர்,
ஆனைமலை பேரூராட்சி,
கோயம்புத்தூர் மாவட்டம்.

3) பேரூராட்சிகளின்இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி நகர், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரிடப்பட்ட உரையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை –600 028.

நகல்,
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை 600 032